# அம்பலவாண தேசிகர் அருளிய "பண்டார சாத்திரம்"

## 1. நமச்சிவாய மாலை & 2. அதிசய மாலை

pANTAra cAttiram of ampalavANa tEcikar

1. namaccivAya malai & 2. aticiya malai

In tamil script, unicode/utf-8 format

**Acknowledgements:**

Our Sincere thanks go to Mr. S. Ganesh and shaivam.org for providing a soft copy of this work and for permissions to include this work as part of Project Madurai collections.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2021.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## திருவாவடுதுறை ஆதீன அருள்திரு அம்பலவாண தேசிகர் அருளிய "பண்டார சாத்திரம் - 1. நமச்சிவாய மாலை"

சீரேற்று நின்கருணைச் சித்தமே புக்குமலப்
போரேற்றி நிற்கப் பொருந்திடுவ தெந்நாளோ
வாரேற்றுங் கொங்கை மகளிர் அறக்கருணைத்
தூரேற்றும் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. 1

வன்னமே நின்னருளை மன்னின்மல வன்னமெலாம்
பின்னமே ஆக்குமருட் பேறளிப்ப தெந்நாளோ
வன்னமே இல்லா வடிவே வருங்கருணைச்
சொன்னமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 2

ஊழே கருணைக் கொருப்பட்டும் ஊழென்னுமலக்
காழே உரைக்குமிந்தக் கற்பகல்வ தெந்நாளோ
பாழே அகலின் பயிர்பா ழெனார்கருணைத்
தோழேதென் னாவடுதண் டுறைநமச்சி வாயனே. . 3

வித்தவா தீப்பிறப்பில் விட்டதால் சங்கமலப்
பித்தவா மாற்றியருட் பேறளிப்ப தெந்நாளோ
தொத்தவா உற்ற அருள் தொண்டர்க்கு நன்மேனி
ஒத்தவா ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 4

இற்றகர்த்தார்ச் காசை எழலால் அருளின்மலக்
கற்றகர்த்து நின்னருளைக் காட்டுவதிங் கெந்நாளோ
சொற்றகர்த்து நின்னருளில் தோய்வார் உளத்தமுதாய்
உற்றகற்றா ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 5

கற்றகலா திற்சுகத்தைக் காதலிக்கும் என்னெஞ்சுப்
பற்றகற்றி நின்னருளைப் பாவிப்ப தெந்நாளோ
சற்றகலா துற்றவர்க்குச் சர்க்கரையே நற்றவரை
உற்றகலா ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 6

விதித்திடுமால் இருவினைக்கே வெய்யமலம் தீயேனைச்
சதித்திடுமால் நின்னருளைச் சார்ந்திடுவ தெந்நாளோ
துதித்திடுமால் உற்ற இன்பத் தொண்டர்க்கு நின்னருளே
உதித்திடுமால் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 7

புண்டகைய நற்றுகிலைப் பூட்டியிருள் மாதருளக்
கண்டகையும் மாயக் கலியகல்வ தெந்நாளோ
தண்டகையும் தீத்தரித்த கையா தவர்க்கமுதாம்
ஒண்டகையே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 8

கற்றவனே ருற்றிலமே காதலிக்கும் என்னெஞ்சு
நற்றவனே ருற்றருளை நாடுவதிங் கெந்நாளோ
சற்றவனேர் நில்லாத் தவர்க்கமுத மாய்நிறைந்தங்
குற்றவனே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 9

சொற்பவமே மாதரின்பு சொல்லிறந்தன் னார்களின்பம்
அற்பகலும் துய்ப்பேற்குன் அருள்தருவ தெந்நாளோ
இற்பவமே மாய அருள் ஏய்வார் உளத்தமுதாம்
உற்பவமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 10

உண்பொருளே நோக்கி உலாவுமனம் ஊணொழித்தென்
கண்பொருளே நோக்க அருட் கண்தருவ தெந்நாளோ!
விண்பொருளே மிக்கோர் விழுங்குமமு தேகருணை
ஒண்பொருளே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 11

பொய்க்கயலாம் நின்கருணை பூண்பதற்குப் பொய்மாதென்
மெய்க்கயலாய் நிற்க விதித்திடுவ தெந்நாளோ
இக்கயலா வேடன் எழிலெரித்த வாநோக்குக்
குக்கயலே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 12

தீக்கயலே நீயாமால் சேர உனைத் தீச்சொலென்றன்
வாய்க்கயலே யாகவுனை வைத்திடுவ தெந்நாளோ
நோய்க்கயலே உற்றதவ நுண்ணியரோ டொத்த அரு
ளோய்க்கயலே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 13

செகத்தயலே நீயாமால் சேர்ந்தவுடற் போகமென்றன்
அகத்தயலே யாக அளித்திடுவ தெந்நாளோ
பகுத்தயலே தானாகப் பார்க்குமான் மாக்கள்
சுகத்தயலே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 14

எண்ணுக் கயலே எழுமா நிதிப்பொருளென்
கண்ணுக் கயலேயாய்க் காட்டுவதிங் கெந்நாளோ
விண்ணுக் கயலே விடுஞ்சுகத்தை வேண்டுமக்கள்
உண்ணுக் கயலேதண் டுறைநமச்சி வாயனே. . 15

மோகத் தயலே முளைப்பாய்நீ மாதரின்பென்
ஆகத் தயலாய் அளித்திடுவ தெந்நாளோ
சோகத் தயலே சுகத்திலிறு மாக்குமக்கள்
ஊகத் தயலேதண் டுறைநமச்சி வாயனே. . 16

போகத் தயலே எனுமால்நீ பொய்ம்மலமென்
பாகத்தய லேய அருள் பண்பளிப்ப தெந்நாளோ
சொகத் தயலே சுகத்திலிறு மாக்குமக்கள்
ஊகத் தயலேதண் டுறைநமச்சி வாயனே. . 17

இன்பத் தயலே எழுமால்நீ தீமலமான்
இன்பத் தயலாக நீக்குவிப்ப தெந்நாளோ
அன்பற் றயலார்க் கருத்தியிறு மாக்குமக்கள்
துன்பத் தயலேதண் டுறைநமச்சி வாயனே. . 18

மாசுக் கயலே மதிப்பான்நீ தீமலத்தின்
தேசுக் கயலாரைச் சேர்ந்திடுவ தெந்நாளோ
ஆசைக் கயலாருக் காவிமனம் ஈயுமக்கள்
ஓசைக் கயலேதண் டுறைநமச்சி வாயனே. . 19

திண்மைக் கயலாமுன் தேசெனுமால் தீயமலப்
பெண்மைக் கயலாரைப் பெற்றிடுவ தெந்நாளோ
வண்மைக் கயலாக்கும் மாதரின்பஞ் சேருமக்கள்

உண்மைக் கயலேதண் டுறைநமச்சி வாயனே. . 20

கள்ளத் தயலாங் கருணையெனும் மான்மலத்தின்
பள்ளத் தயலாரைப் பற்றிடுவ தெந்நாளோ
வெள்ளத்தய லாக்கும்மருள் மேவுமங்கை இன்புறுவார்
உள்ளத் தயலேதண் டுறைநமச்சி வாயனே. . 21

கோணுக் கயலாய்க் குறிப்பானீ தீயமல
நாணுக் கயலாரை நண்ணுவிப்ப தெந்நாளோ
மாணுக் கயலாக்கும் மாதரின்பஞ் சேருமக்கள்
ஊணுக் கயலேதண் டுறைநமச்சி வாயனே. . 22

கன்னவாய் செய்யக் கருவிகொடுத் தொக்கநின்றும்
இன்னல்வாய்த் தீநிரயத் தேற்றுவிப்ப தெவ்வாறோ
மன்னுவாய் தீதகல மாதவர்க்கு மற்றுமன்பாய்
உன்னுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 23

எள்ளுவாய் தீதை உணஏயுங் கருவிதந்து
தள்ளுவாய் நீநரகைத் தந்திடுவ தெவ்வாறோ
கொள்ளுவாய் முத்தர்தனுக் கோவிலுளம் நீயாக
உள்ளுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 24

மணந்தாள் அல் லாரை மருவுகைக்கு அங்குஅங்கம்
புணர்ந்தாய் நரகதனிற் போடுவதிங் கெவ்வாறோ
கொணர்ந்தாய்நன் மேனி கொடியேன் கொடுமையற
உணர்ந்தாய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 25

கள்ளுவிற் பார்க்கேற்ற கருவியளித் துள்நின்றும்
கொள்ளுவிப்பாய் நீ நரகிற் கூட்டுவதிங் கெவ்வாறோ
தள்ளுவிப்பாய் தீதைப் தவர்க்கமுத மாயுளத்தங்(கு)
உள்ளுவிப்பாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 26

குந்தமே ஈந்தும் கொலைக்குளருங் கூட்டியென்னால்

அந்தமே யாக்கிநர காக்குவதிங் கெவ்வாறோ
தந்தமேல் இச்சையறச் சார்ந்ததவத் தோர் உளத்துள்
தொந்தமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 27

கொல்லுவாய்க் கெல்லாம் கொலைக்கருவி ஈந்துளரும்
நல்குவாய் நீநரகில் நண்ணுவிப்ப தெவ்வாறோ
புல்குவார் உள்ளம் புகுவாய்பொய் மக்களுளத்து
ஒல்குவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 28

தேனே தினஊன் கொல உயிரைக் கூட்டியும்நீ
தானே நிரயமெற்குத் தந்திடுவ தெவ்வாறோ
தேனே புலால்மறுத்த செல்வர் உளம்புகுந்த
ஊனேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 29

வலைவாய்ப் படவகையுங் காட்டி உயிர்மாய்த்துத்
தலைவாய் நரகமெற்குத் தந்திடுவ தெவ்வாறோ
மலைவாய் இலாத அருள் மன்னுவார் உள்ளத்(து)
உளைவாய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 30

களிப்பாய்க் குருநிந்தை கத்துதற்குச் சிந்தை
அளிப்பாய் நரகதற்கும் ஆக்குவதிங் கெவ்வாறோ
துளிப்பார்கண் ணீர்வாய் துதிப்பாரைத் தாளில்
ஒளிப்பாய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 31

இடிப்பார்க்குக் கோயில் உடல் ஈந்தும் பிரேரித்தும்
கொடுப்பாய் நரகக் குழிவைப்ப தெவ்வாறோ
எடுப்பாய்த் திருக்கோயில் ஏத்துவார் நீயாய்த்
தொடுப்பாய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 32

ஈட்டுவாய்க் கெல்லாம் இயற்று மலவினைக்காய்க்
கூட்டுவாய் நின்செயலாய்க் கூறிடுவ தெத்தாலோ
காட்டுவாய் தீதகலக் காண்பார்க்கு நின்னருளே
ஊட்டுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 33

கூட்டுவாய் தீதினிது கூடுமிருள் மான்நோக்கி
ஆட்டுவாய் நின்செயலாய் ஆக்குவதிங் கெத்தாலோ
கேட்டுவாய்த் தீநெஞ்சைக் கிட்டாமல் நின்னோக்கால்
ஓட்டுவாய் ஆவாடுதண் டுறைநமச்சி வாயனே. . 34

ஆக்குவாய் நீவினைக்கீ டான்மலத்தின் பின்னாகத்
தாக்குவாய் நின்செயலாய்ச் சாற்றிடுவ தெத்தாலோ
நீக்குவாய் ஐம்புலனும் நீங்காத அன்பரன்பாய்
ஊக்குவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 35

ஆட்டுவிப்பாய் நீவினைக்கீ டவ்வினையும் நீதானே
ஈட்டுவிப்பாய் என்ன இசைத்திடுவ தெத்தாலோ
காட்டுவிப்பாய் பொய்யகலக் காண்பார்க்கு நின்னைஇன்பாய்
ஊட்டுவிப்பாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 36

பூட்டுவாய் நீகருவி பூண்பார்க்குப் பொய்வினையைக்
கூட்டுவாய் நின்செயலாய்க் கூறிடுவ தெத்தாலோ
வீட்டுவாய்த் தீதுக்கு இருநிரயத் தாக்கிமலம்
ஓட்டுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 37

மதித்திடுமா லால்வினையும் மனப்படலால் மலத்தைமுன்னாய்
விதித்திடலாம் தீநீயாய் விளம்பிடுவ தெத்தாலோ
சதித்திடலால் உளத்தைமலம் தகுநிரயத் தாக்கிஅருள்
உதித்திடுமால் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 38

பொய்விப்பார் அங்கத்தில் பூண்டபணி யால்மருளச்
செய்விப்பார் நின்செயலாய்ச் சேர்த்திடுவ தெத்தாலோ
மெய்விப்பாய் உன்னை விரும்ப அரு ளாரமுதத்(து)
உய்விப்பாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 39

விதித்திடஎப் பிறப்பினுளும் மேவுமலம் மிக்கென்னைச்
சதித்திடவும் நின்செயலாய்ச் சாற்றிடுவ தெத்தாலோ
மதித்திடநின் அன்பரன்பை மன்னியருள் மெய்நீயா

உதித்திடுமால் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 40

தற்பகையைக் காய்ந்த தவர்க்குவிட மானமல
இற்பகையை நன்றென் றிசைத்திடுவ தெத்தாலோ
கற்பகலா மாதைக் கடிந்ததவத் தோருளத்துள்
உற்பவமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 41

துன்றுவாய் எல்லாம் துலங்கக் கருவிதந்து
நின்றதால் ஈட்டுவித்தல் நீஎன்ப தெத்தாலோ
பொன்றுங்கால் தீநரகிற் பூட்டிமல மோட்ட உளம்
ஒன்றுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 42

வானே ருடலுளமும் வாங்கவும்நீ தீயேற்குத்
தானே பிராரத்தஞ் சாற்றிடுவ தெத்தாலோ
தேனே உயிர்க்குயிரே சேர்ந்ததவத் தோர்தரித்த
ஊனேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 43

காட்டுவாய் நீவினையைக் காதலித்து நிற்காகக்
கூட்டுவேன் எற்கென்னக் கூறிடுவ தெத்தாலோ
ஊட்டுவாய் நற்றவர்கள் ஊட்ட அடை உண்டுமலம்
ஓட்டுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 44

புல்குவாய் எல்லாம் புணருவாய் என்னைஅற
நல்குவாய் அவ்வினைக்கு நானென்ப தெத்தாலோ
செல்குவாய்க் குன்னருளைச் சேராதார் உள்ளமுற
ஒல்குவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 45

வான்றீ செயினுமுளம் மன்னிமலம் மாற்றியருள்
தேன்றீன் இடவும்வினை சேருமென்ப தெத்தாலோ
மான்றீ என இலத்தை மாற்றுவார் நெஞ்சமுதாய்த்
தோன்றீதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 46

களித்திடுமால் இருவினையைக் கைக்கொடுக்க வாங்கிநிற்கே

அளித்திடுமால் எற்கென் றறைந்திடுவ தெத்தாலோ
குளித்திடுமால் நின்பதத்திற் கூடியயான் நீயாய்
ஒளித்திடுமால் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 47

கண்கதிரே நோக்குஇருள் காணாதென் ஆவிஅருள்
தண்கதிரே நோக்கில்வினை தாக்குமென்ப தெத்தாலோ
விண்கதிரே தீதை விளைக்குமிரு ளோட்டுமருள்
ஒண்கதிரே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 48

யானேநீ யாலென்றன் அங்கமும்நின் அங்கமதால்
கோனே வினையெனக்குக் கூடுமென்ப தெத்தாலோ
தீனே விரும்பிச் செயற்படுவார் அங்கமுறா
தோனேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 49

காழே மலமகலக் காட்டி உனைக்கருணை
வாழ்வே அளித்தும்வினை வைப்ப தென்பதெத்தாலோ
ஊழே அகல அருள் ஊணாக்கி ஊட்டும் அருள்
தோழேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 50

ஆவியும்நீ என்றன் அங்கமும்நின் அங்கம்வினை
தாவியுமேல் சாருமெனச் சாற்றிடுவ தெத்தலோ
சாவியமேல் நோக்கும் தவருளத்தை நீங்காத
ஒவியமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 51

ஊணே உனக்கூட்டி உண்டும் உனக்குழைத்தும்
கோணையறுப் பார்க்குவினை கூடுமென்ப தெத்தாலோ
வீணே தொழில்புரியா மிக்கவர்கள் உற்ற அருள்
தூணேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 52

புண்ணியமேல் பாவங்கீழ் போக்குமற நின்பாலில்
பண்ணியதே அவ்வினையைப் பாற்றின்முத்தற் கேனாமோ
எண்ணியுமே நின்னடியார்க் கீவார்கள் மும்மலமும்
உண்ணையுமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 53

நீக்கிமால் நெஞ்ச நினைவை நினக்காக
ஆக்குமால் ஊழெற் கணையுமென்ப தென்னாமோ
போக்குமால் போக்கியுன்றன் பொன்னடியால் ஊழகற்றி
ஊக்குமால் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 54

ஓட்டிமால் ஐம்புலனை உற்றஎனை மாற்றிநெஞ்சம்
ஈட்டுமால் நிற்காய் இதாகிதமெற் கென்னாமோ
ஆட்டுமால் உற்றவினை அற்றார்க் குனையமுதாய்
ஊட்டுமால் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 55

அங்கத்தால் உற்ற அருநோய் அணையலும் உன்
சங்கத்தால் மாற்றுமெற்கூழ் சாருமென்ப தென்னாமோ
மங்கத்தான் ஊழை மருவுமுயிர் தானான
துங்கத்தாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 56

சித்தமும் தீய கரணமுஞ் சித்திலே
ஒத்ததே என்னமுத்தற் கூழென்ப தென்னாமோ
பித்தமே மாற்றிப் பெறுஞ்செயலும் நின்செயலாய்
ஒத்ததே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 57

கன்னமே வான்பொருளிற் காதல் உனக்காக
உன்னுமே நெஞ்சம் உறுவினைஎற் கென்னாமோ
வன்னமே தீக்கை மனுவால் மறைந்தருளாய்த்
துன்னுமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 58

பரியுமே நற்பொருளைப் பற்றி உனக்காக்த்
தெரியுமே நெஞ்சம்பொய்த் தீவினைஎற் கென்னாமோ
திரியுமே ஆவிதனுச் சேர்ந்தபொரு ளோடன்பாய்ச்
சொரியுமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 59

தேட்டமே நீயாய்த் திரண்டபொருள் நிற்காக
வீட்டுமேல் கண்கள் இதாகிதமெற் கென்னாமோ
நாட்டமே எள்ளளவு நாடிலுனை மும்மலமும்

ஓட்டமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 60

நாவேயும் இன்பமதை நண்ணிமனம் உன்நாவுக்
காவே கருதல் அருவினைஎற் கென்னாமோ
சாவே விடுத்ததவர் தற்பரத்தோ டுற்றபரந்
தேவேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 61

கெந்தமே நற்பொருளைக் கேடிலுனக் காகமனம்
உந்துமே யாகில் உறுவினைஎற் கென்னாமோ
பந்தமே அற்றார் பரத்தோ டுறுபரமாம்
மொந்தமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 62

பாதமேல் உற்ற பணிபலவும் நின்னடிக்கென்
போதமே யேற்றப் புகின்வினையெற் கென்னாமோ
சேதமேல் தீயமலம் சேர்ந்தவெலாம் நீயாமென்(று)
ஓதுமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 63

பாணிமேல் உற்ற பணிபலவும் நின்னடிக்காய்ப்
பூணுமே நெஞ்சம் புதுவினையெற் கென்னாமோ
நாணுமேல் தீயமலம் நன்குடலும் நீயாக
ஊணுமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 64

அங்கமேல் உற்ற அவலவினை போக்கிநெஞ்சுன்
சங்கமே ஆக்கில்வினை தாக்குமென்ப தென்னாமோ
மங்குமேல் தீயமலம் மற்றவெல்லாம் நீயாக்கும்
துங்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 65

ஆகமேல் உற்றங் கணைவாரை என்னெஞ்சுன்
பாகமே யாகப் படுத்தின்வினை என்னாமோ
மோகமே இல்லாத முத்தர்தமை நீயாக்கும்
யோகமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 66

போகமே நோக்கிப் புணர்வாரை உன்னடிக்காம்

பாகமே யாகப் படுத்துவித்தால் ஆகாதோ
வேகமே யாக விசைவாரை நீயாக்கும்
யோகமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 67

காதலே உற்றுக் கருதுவார் தம்மையருட்
பாதமே நோக்குதற்குப் பண்ணுவித்தால் ஆகாதோ
பேதமே அற்றாரைப் பின்னமறத் தானாக்கும்
ஓதமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 68

மயலே மிகநோக்கி மன்னுவார் நின்னடிக்காஞ்
செயலே விரும்புதற்குச் செய்வித்தால் ஆகாதோ
இயலே விரும்பி இசையாதார் தங்கட்(கு)
அயலேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 69

வாக்குமேல் காயமனம் மற்றதெல்லாம் உன்னடியை
நோக்குமே ஓர்கருவி நோயாக நோக்கிமிக
நீக்கமே செல்வா நிறைவாகும் நீயாக
ஊக்குமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 70

இருபாற்கும் ஓர்கருவி ஏயுமால் தீதை
மருவார்க்கு நன்கருளே மன்னுவித்து மாலை
ஒருவார்க்குப் பொய்யே உறுவித்துத் தீதில்
உறுவாக்கும் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 71

கன்மத்தால் அஞ்ஞானம் காட்டலால் நின்கருணைத்
தன்மத்தால் நீயாகக்ச் சாற்றியிட லாகாதோ
வன்மத்தால் செய்கை வருவிப்பார் ஈடழித்த
உன்மத்தா ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 72

சாதியே உற்றாரைச் சாதிசொல்ல லாங்கருணை
ஆதியே ஆகிலப்பேர் ஆக்கியிடல் ஆகாதோ
ஓதியே சாதி ஒளிப்பாரோடு ஒட்டாநற்
சோதியே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 73

பாயும் பரிபாயப் பாகனென லாம்கருணை
ஏயும் உயிரதனை ஈசனெனல் ஆகாதோ
சாயும் மலமதறச் சார்ந்த உயிர் மேற்கருணை
தோயும்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 74

அங்கமேல் செல்லவுற்ற ஆவிஎன லாம்கருணைச்
சங்கமே சொலின்நீயாச் சாற்றியிடல் ஆகாதோ
பங்கமேல் தீயமலம் பற்றுமுடல் நீயாக்கும்
துங்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 75

ஆகமே உற்றாரை ஆகமென லாம்கருணை
ஏகமே யாகில் அருள் ஈசனெனல் ஆகாதோ
பாகமே உற்றாரைப் பற்றியருள் தானாக்கும்
யோகமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 76

பொன்னோ டுறுஞ்சீலை பொன்னதென லாம்கருணை
தன்னொடுறு வாரையருள் தானெனலும் ஆகாதோ
என்னோ டுடல்வினையும் ஏற்றுமலம் மாற்றுமருள்
சொன்னாதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 77

லிங்கமே உற்றமணல் லிங்கமென லாம்கருணைச்
சங்கமேல் ஆவிஅருள் தானெனலும் ஆகாதோ
பங்கமேல் தீயமலம் பற்றுமுயர் நீயான
துங்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 78

மந்திரமே சேரின் மனுவெனலாம் மெய்ஞ்ஞானத்
தந்திரமே சேரினருள் தானெனலும் ஆகாதோ
அந்தரமே நின்பதமென் றாதரிப்பார் அங்கமறாச்
சுந்தரமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 79

சாதியே மாறுஞ் சமயத்தென லாம்ஞான
நீதியே யாகிலருள் நீதியெனல் ஆகாதோ
ஆதியே ஆவிஅறில் அப்பரத்தோ டுற்ற அருட்

சோதியே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 80

நீரே கடம்மருவின் நீரதென லாம்கருணைச்
சீரேல் உயிர்கருணைச் சித்தெனலும் ஆகாதோ
பாரேர் இருவினையைப் பற்றிமல வேரறுத்த
சூரேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 81

முட்டேறு வாரையந்த முட்டதென லாம்கருணை
தொட்டேறு வாரையருட் சோதியெனல் ஆகாதோ
விட்டேறு வாருடலை மேவியருள் தானாக்கும்
சுட்டேறே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 82

கெடுக்கும் வினையுருவாய்க் கெடுக்குமென லாமுன்னைக்
கொடுக்கும் கருணையுருக் கொண்டதெனல் ஆகாதோ
தடுக்கும் மலமதறத் தத்துவமே நிற்காய்
ஒடுக்குந்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 83

பாதகமே செய்தாரைப் பாவியென லாம்கருணைப்
போதகமே செய்யிலருட் பொற்பெனலும் ஆகாதோ
சாதகமே நீயாம் தவத்தோர் தனுவையறாத்
தோதகமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 84

பித்தமே உற்றாரைப் பித்ததென லாம்கருணைச்
சித்தமே ஆகில்நீயாய்ச் செப்பியிடல் ஆகாதோ
அத்தமே நீயாக ஆர்ச்சிப்பார் அங்கமறாச்
சுத்தமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 85

தீய்யேற் களித்தபொருள் தீயதென லாம்கருணை
மெய்யேற் களிக்கிலருள் மெய்யெனலும் ஆகாதோ
பொய்யேற்கு நின்னருளைப் பூட்டிஉயிர் வாங்குமருள்
துய்யோய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 86

பாவியே ஏற்றபொருள் பாவமென லாம்கருணை

மேவியே ஏற்கிலருள் மெய்யெனலும் ஆகாதோ
ஆவியே நீயாக அற்றவர்மேல் உற்ற அருள்
தூவியே ஆவதண் டுறைநமச்சி வாயனே. . 87

பொக்கமேய் வார்க்கீகை பொக்கமென லாம்கருணைப்
பக்கமேய் வார்க்குஅருட் பண்பெனலும் ஆகாதோ
அக்கமே நீயாக ஆக்குவார் உள்ளமுற்ற
சொக்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 88

இழிவோர்கட் கீகை இழிவெனலாம் நின்கருணை
மொழிவோர்கட் கீகையருள் முற்றெனலும் ஆகாதோ
அழிவோர் அகமதுற்ற அங்கமென்றுஞ் செல்லா
ஒழிவேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 89

சிக்கேய்வார்க் கீகைமலச் சிக்கெனலாம் நின்கருணை
மெய்க்கேய்வார்க் கீகையருள் மெய்யெனலும் ஆகாதோ
பொய்க்கேய்வார் உள்ளம் பொருந்தாத நற்கருணைச்
சொக்கேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 90

மத்தமேல் உற்றார் உன் மத்ததென லாம்கருணைப்
பித்தமேல் உற்றார் உன் பித்ததெனல் ஆகாதோ
சித்தமே நீயான சித்தர் செயலுகந்த
சுத்தமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 91

பேயொத்தார் உற்றசெயல் பேயெனலாம் நின்கருணை
யாயொத்தார் செய்கை அருளெனலும் ஆகாதோ
நீயொத்தார் ஒத்து நினைக்கில்நின தாக்கும் அருள்
தூயொத்தாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 92

கள்ளேய்வார் உற்றசெயல் கள்ளதென லாம்கருணை
நள்ளேய்வார் செய்கைஅருள் நல்கெனலும் ஆகாதோ
எள்ளேயும் இல்லத்து இசையாதார் அங்கமுற்ற
உள்ளேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 93

மாலேய்வார் செய்கைஅந்த மையலென லாம்கருணை
யாலேய்வார் செய்கை அருளெனலும் ஆகாதோ
தோலேயும் அங்கம் துடைப்பார் உளம்புகுந்த
நூலேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 94

தீங்குவாய் எல்லாம் செலினும் உனைஅளித்து
வாங்குவாய் நின்செயற்கு வைப்பதற்கென் கைம்மாறே
நீங்குவாய் எல்லாம் நிரப்பியநன் முத்தருளத்(து)
ஓங்குவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 95

மருவனே ருற்றமருட் செல்வம் அறஈசன்
தருவனே என்ன உருத் தந்ததற்கென் கைம்மாறே
பருவநே ராக அருட் பண்பாங் கருணை
ஒருவனே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 96

களவே பலிப்பதற்காய்க் காணில் களவின்
அளவே கெடாதருளை ஆக்குநிற்கென் கைம்மாறே
மெளவே உனைநோக்கி மேவுவார் தங்கட்(கு)
உளமேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 97

ஈற்றுவாய் நோயில் எழுவாயும் துன்பத்தால்
கூற்றுவாய்க் கேற்றவுருக் கொண்டதற்கென் கைம்மாறே
வேற்றுவாய் ஐம்புலனும் வேறாக நன்மேனி
தோற்றுவாய் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 98

மகப்பேறே இச்சையால் வந்திக்க நின்னைஅந்த
வகைப்பேறே அன்றிஅருள் வைப்பதற்கென் கைம்மாறே
பகைப்பேறே இல்லமெனப் பார்த்தகல்வார் நெஞ்சிற்
சுகப்பேறே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 99

அற்றோயும் நற்கண்போல் ஆரிருளை ஆர்மதிக்கோர்
கற்றோயும் நற்கதிர்போல் காட்டுநிற்கென் கைம்மாறே
இற்றோய் விலாத அன்பர் ஏயும் இடந்தோறும்

உற்றோய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 100

தீனே நினைவுடற்குத் தேடினன் காண்நினைவைத்
தானே நினைத்தேடத் தந்ததற்கென் கைம்மாறே
தேனே உனையடைந்த செல்வர்க்கமு தான அரு
ளோனேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 101

அல்லேயக் கண்ணுக்கில் ஆயிழைதன் இன்பமல்லால்
இல்லே எனுமால் எரித்ததற்கென் கைம்மாறே
எல்லே தவத்தோர்கள் இன்பமே ஆங்கவர்கள்
சொல்லேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 102

பெத்தமே புல்முதலாய்ப் பெற்றதெல்லாம் நம்மருளைத்
தொத்துமே என்ன உருத் தோய்ந்ததற்கென் கைம்மாறே
சித்தமே புக்கிருந்த தீவினையும் நிற்காக்குஞ்
சுத்தமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 103

மித்தே அகலவலம் மேவுதற்குப் பூவையிடு
வித்தே தொழமேனி வேண்டுகைக்கென் கைம்மாறே
முத்தே கருணைமுளைத்தென்மலம் மாற்றுமின்பத்
தொத்தேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 104

போகமே உண்ணாதுன் பொன்னடியை நோக்கும் நெஞ்சன்
ஆகமே நீயாய் அமைத்ததற்கென் கைம்மாறே
மோகமே மிக்கோர் மொழியும் முகக்கருணை
யோகமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 105

இருவினையே தீதென்பால் ஏய்ந்ததுநிற் காக்க உரு
மருவினையே பூசை மகிழ்தலுக்கென் கைம்மாறே
திருவினையே இருவினையைத் தீர்க்குமெனும் அன்பருணும்
ஒருவினையே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 106

புத்திவாய் எல்லாம் புகுந்துபொருள் வாங்கிஎன்பால்

அத்துவா சுத்தி அமைத்தற்கென் கைம்மாறே
பித்துவாய் ஐம்புலனைப் பேர்த்துநினக் காக்கும் அன்பர்க்
கொத்தவா ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 107

கன்னமே வாயாய்நீ கள்ளமலம் ஐந்தினையும்
பின்னமே செய்தருளைப் பெய்ததற்கென் கைம்மாறே
வன்னமே இல்லா வடிவேமிக் கோர்க்குதவுஞ்
சொன்னமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 108

காதே வழியாக்கிக் காதலுற நின்கருணைத்
தூதே அளித்த துணைவ நிற்கென் கைம்மாறே
தீதே அகற்றஎன்றன் தீயவுருப் போலமைந்த
சூதேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 109

சேதனமே மாற்றித்தன் செய்தியதா க்கும் உடல்நிற்(கு)
ஆதனமே யாக அமைத்தற்கென் கைம்மாறே
சாதனமே பூண்டுடலைச் சாராதார் உண்ணுமருள்
ஓதனமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 110

சிறைவாய்ப் புலன்கணையாய்ச் சிந்தையுள் ளும்புக்கு
நிறைவாய் மலமொதுக்கி நின்றதற்கென் கைம்மாறே
இறைவா நினைவுனக்கே ஈந்தார்கள் உள்ளத்(து)
உறைவாய்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 111

பூவியமே நோக்களற்கிப் பூமிசையின் நின்னுருவாம்
பாவியமே செய்த பரிசதற்கென் கைம்மாறே
ஆவியைமேல் நோக்கிஅறி யாமைஅறுப் பார் உளத்துள்
ஓவியமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 112

உற்றே இருவினையும் ஓர்வினையே யாகவுளம்
நிற்றே பிராரத்தம் நீக்குதற்கென் கைம்மாறே
நற்றேற் குனையும்பொய் நள்ளிருளுங் காட்டுமருள்
ஒற்றேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 113

நாட்டமே வாயாய் நடந்துளத்தை வாங்கிமலக்
கோட்டமே மாற்றிஅருள் கூட்டுதற்கென் கைம்மாறே
ஆட்டமே நிற்காய் அமைப்பார்கள் ஆடுமருள்
தோட்டமே ஆவடுதண் டுறைநமச்சி வாயவே. . 114

மலமே அகலுகைக்கு வாய்த்த கருவிக்
குலமே அளித்தறிவைக் கூட்டுகைக்கென் கைம்மாறே
இலமே பகைத்திங் கெழுவார்கட் குற்ற
நலமேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 115

இருளே மலம்கருவி ஈயாக்காண் நீயும்
பொருளே எனவிளக்கிப் பூண்டதற்கென் கைம்மாறே
மருளே அகல மருவுமுயிர் தானாம்
அருளேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 116

ஊனே விரும்பி உயிர்செகுக்கும் தீயமனம்
தானே அகல அருட் சார்ந்ததற்கென் கைம்மாறே
கோனே உயிர்க்குயிரே கோலம்பல வான அருள்
தேனேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 117

அங்கமே நோக்கி அணையுமக ளீர்தம்
சங்கமே மாற்ற அருள் தந்ததற்கென் கைம்மாறே
மங்கமேல் தீது மருவுங் கருணைகொண்ட
துங்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 118

தந்திரமே தீதனைத்தும் தானாய்த் தழுவும்நெஞ்சுன்
மந்திரமே நோக்க அருள் வைத்ததற்கென் கைம்மாறே!
அந்தரமே நில்லா அகன்ற அறி வாய்நிறைந்த
சுந்தரமே! ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 119

தாயர்பால் உற்றுத்தருக்கும்மனம் உன்னடியில்
பாய அருளளித்த பண்பதற்கென் கைம்மாறே
மாயும் மலமதற வாழுமுயிர் தானாகத்

தோயுந்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 120

தந்தைபால் உற்றுத் தருக்கும்மனம் உன்னடியில்
வந்தனையே செய்ய அருள் வைத்ததற்கென் கைம்மாறே
சிந்தனையே நீயாய்ச் செறிந்த உயிர் நீயாகும்
தொந்தனையே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 121

பாசமே தானாகப் பற்றும்மனம் உன்பூசை
நேசமே தானாக நின்றதற்கென் கைம்மாறே
நாசமே இல்லா நவைவேர் அறுத்த உயிர்
வாசமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 122

காமமே உற்ற கடுவிருளை உன்மேனி
நாமமே ஓட்டிஅருள் நாட்டுகைக்கென் கைம்மாறே
தாமமே சாத்தித் தருக்குந்தவத் தோர் உளத்துச்
சேமமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 123

காயமே தானாய்க் கருதுமனம் உன்னடியிற்
சாயமேல் வைத்த சதுரதற்னென் கைம்மாறே
ஞாயமே யாக நடப்பார்கள் ஆடும் அருள்
தோயமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 124

தன்னியல்பே மாற்றித் தகும்பொதுவே ஆக்குமலம்
அன்னியமே ஆக்கைக்கு அளித்ததற்கென் கைம்மாறே
என்னியல்பே நீயாய் எழுகைக்கு எழுப்புமருள்
உன்னியல்பே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 125

மாற்றி மலத்தை வருமுயிரை நீயாகத்
தேற்றி நடத்துஞ் செயலதற்கென் கைம்மாறே
ஆற்றுந் தனுவை அறிவிட்டார் தாமாகத்
தோற்றுந்தென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 126

வன்னமே தீக்கை மருவமல வன்னமதைப்

பின்னமே ஆக்குமருட் பேறதற்கென் கைம்மாறே
கன்னமே நின்புகழைக் காதலிக்கக் காதலுற்ற
சொன்னமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 127

மலமாலே நோக்கி வருமுயிரை நீயாம்
குலமாலே யாக அருள் கொண்டதற்கென் கைம்மாறே
பலமாலே யாகப் படுத்திமலம் மாற்றிமிக்க
நலமாலே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 128

மலமேல் ஒருமலமாய் வாய்த்த கருவிக்
குலமே அருளாகக் கொண்டதற்கென் கைம்மாறே
நலமே இலதாக நாட்டுமலம் தீர்த்த அருட்
செலமேதென் ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 129

இருவினையே மும்மலத்தோ டொன்றாக ஏய்ந்து
வருவினையே நின்னடிக்காய் வைத்ததற்கென் கைம்மாறே
கருவினையே மாற்றிஉனைக் காதலிப்பார் தங்கட்கு
ஒருவினையே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 130

இருவினையே திருவினையாய் ஏயும் இருவினையும்
ஒருவினையே ஆக அருள் ஊக்குதற்கென் கைம்மாறே
மருவினையே யாக்கை மருவாரை மாற்றார்க்(கு)
ஒருவினையே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 131

தம்பனையே நீயாம் தகுங்காமே யானாகும்
வெம்பும் அனல்வினையாய் வேண்டுகைக்கென் கைம்மாறே
நம்புமுயிர் நீயாக நாட்டிவினை மாற்றுமருள்
செம்பனே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 132

மந்திரமே நீயாய் மருவுமங்கம் யானாய்ப்பொய்ப்
பங்தவினை பாம்பாகப் பண்ணுதற்கென் கைம்மாறே
தந்திரமே நீயாய்த் தழுவிவினை மாற்றுமருட்
சுந்தரமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 133

இங்கே வினையதனை ஏயுமுடல் பாத்திரம் உன்
நன்கையே ஏந்தி நடக்குதற்கென் கைம்மாறே
மங்கமேல் தீயவுடல் மற்றுமுடல் ஈயாத
துங்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயானே. . 134

இங்குப்போம் பாத்திரத்தில் இங்கிலையால் அங்கத்துத்
தங்கும் வினைதீர்த்த சதுரதற்கென் கைம்மாறே
சங்கமே நீயாய்த் தரிக்கின்வினை மாற்றுமிக்க
துங்கமே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 135

உன்னியல்பே என்னோடு உறுமியல்பாம் என்னியல்பே
உன்னியல்பை ஒட்டி உணர்வதற்கென் கைம்மாறே
தன்னியல்பே எல்லாம் தவிர்ந்தநடை தானாகும்
உன்னியல்பே ஆவடுதண் டுறைநமச்சி வாயனே. . 136

நமச்சிவாய மாலை முற்றிற்று

-------------------

## திருவாவடுதுறை ஆதீன பண்டார சாத்திரம்
## அருள்திரு அம்பலவாண தேசிகர் அருளிய "அதிசய மாலை"

புலிகழல் ஆடியும் பாம்புன்னைப் போற்றியும் போதமில்லா
எலிகழல் ஆடியும் ஈயுன்னை ஏத்தியும் எண்ணுகிலாக்
கலிகழல் ஆடிய கண்டன்கண் டாய் எனைக் காகருணை
ஒலிகழல் ஆடிய கூத்தா துருத்தி உயர்ந்தவனே. (1)

பொய்யேன் மலவலி பூண்டுடன் ஆடிய போதனன்பு
செய்யேனின் பாதத்துக் கன்புசெய் வார்க்கென்றன் சித்தம்பற்றி
மெய்யே விதிக்கின்ற அன்பர்க்குத் துன்பம் விளைக்குந்துட்டத்
திய்யேற்கு நீவெளிப் பட்டதென் னோசொல் சிதம்பரனே. (2)

செய்யேற்கும் நின்பதச் சீரேற்கும் நின்னன்பர் சேர்ந்தவர்பால்

மெய்யேற்கும் உள்ளத் துணர்வுடை யோர்கள் விருப்பதில்லா
மையேற்கும் வஞ்சத்தில் வாழ்கின்ற வாழ்வை மதித்துடனாம்
தியேற்கு நீவெளிப் பட்டதென் னோசொல் சிதம்பரனே. (3)

பரிசித்த காயத்தை நீங்காத நெஞ்சன் படிற்றையென்றுந்
தெரிசித்த நோக்கன்சிற் றேவலை மேற்கொண்ட சித்தனிந்நாள்
வரிசைத் தவத்தின ரோடுநின் பாதம் வணங்கநெஞ்சில்
உரிசித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (4)

நெருக்கிய தீமலத்(து) ஆவிஉள் ளாகி நெடியநெஞ்சைச்
சுருக்கிய காமம் அதனொடு முக்கிய துட்டனந்தோ
தருக்கிய இன்பத் தவரொடு நின்பதஞ் சாரநெஞ்சை
உருக்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (5)

தாங்கிய நின்னருள் என்பால் இருக்கத் தமோமயமாய்த்
தூங்கிய தென்னெஞ்சு நின்றாள் வெறுத்திந்தத் துஞ்சலற
வாங்கிஅத் தாளில் அடக்கி தவரொடும் வாழநெஞ்சத்(து)
ஓங்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே (6)

கருகிய தீமலத்(து) ஆவிஉள் ளாய் உற்ற காயமுமாய்ச்
சொருகிய காமத்துந் தானுட னாயுஞ் சுழலுமிந்நாள்
பருகிய இன்பத் தவரொடு நின்பதம் பற்றநெஞ்சம்
உருகிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (7)

துன்றிய தீமலம் தன்வண்ண மாகத் துளங்க உள்ளம்
குன்றிய தாகும் விடயங்கள் தோறும் குலையமலம்
வென்றிய பாதத் தவரொடு நின்பதம் வேண்டநெஞ்சம்
ஒன்றிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே! (8)

திதித்ததெவ் வாறதவ் வாறதென் னாவிஉன் தேசதின்றாய்
விதித்ததெவ் வாறதவ் வாறு விரும்பி விருந்துமையல்
மதித்ததெவ் வாறதவ் வாறது வாகும் மதியதுன்பால்
உதித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (9)

அற்றதென் ஆவி தனுவாய் மனமதற்(கு) ஆயிழையாய்
நற்றவர் வாக்குப் பொருளாய் அடியிணை நண்ணுகில்லாத்
தெற்றினை மாற்றித் தவரொடுஞ் சேர்த்தென்றன் சிற்றறிவில்
உற்றதெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (10)

ஆட்டிய தீமலத் தாக அத் தீமலம் ஆகமெனக்
காட்டிய தாமெனைத் தீவினை யாவையுங் காதலிக்கப்
பூட்டிய தாமதைப் போக்கி உளத்துப் பொருந்த அருள்
ஊட்டிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே (11)

அன்னிய வஞ்சத்தை நெஞ்சத் தடக்கி அகத்துளின்பாய்த்
துன்னிய சற்குரு லிங்கத் தவரையும் தொல்லிருளாய்ப்
பன்னிய தீமலந் தாளால் அடக்கிப் பரிந்துனைநான்
உன்னிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (12)

கருப்பட்ட காலத்தில் புத்திஒத் தாயதில் காயமொத்தி
வரப்பட்ட காலத்தில் தந்தைஒத் தாயது மன்னியங்கந்
திரப்பட்ட காலத்தின் மங்கையொத் தாயதென் சித்தநின்பால்
ஒருப்பட்ட வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (13)

தெள்ளிய நீகுரு யானுடல் தீமங்கை செய்தொழிலுக்(கு)
ஒள்ளிய உள்ளத்(து) உறுதீயன் மாதரை உள்குவித்து
எள்ளுங் குருவினை யானுனை நோக்கி இசைந்தடியை
உள்ளிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (14)

பாக்கிய மாவது நின்றாள் இணைக்கன்பு பற்றியங்கம்
போக்கிய தாமதைப் போக்காமல் யானெனப் போற்றியன்பங்(கு)
ஆக்கிய தீயன் அகமே புகுந்தந்த அன்புனக்காய்
ஊக்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே! (15)

கருப்பட்ட காலத்தில் ஆவிஒத் தேறிய காயமதாய்
உருப்பட்டு மங்கைதன் கொங்கையிற் பட்டுமிக் கோர்நெறியும்
போரப்பட்டெப் பாவத்தும் உட்பட்டு நிற்கின்ற போதநின்பால்

ஒருப்பட்ட வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (16)

அழித்தது நின்பதத்(து) அன்பைப்பொற் பாதத் தடியவரைப்
பழித்தது பாவப் பயனெதும் பற்றிப் பரிந்துபொய்யில்
விழித்ததென் நெஞ்சம் அடியாரை வேண்டி விரும்பமலம்
ஒழித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (17)

காட்டிய வாறதெவ் வாறதவ் வாறு கருதுமுளம்
ஆட்டிய வாறதெவ் வாறதவ் வாறினும் ஆடுமருள்
கூட்டிய வாறதெவ் வாறதவ் வாறினுங் கூடமலம்
ஓட்டிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே (18)

விதிக்கின்ற நான்கினை எல்லாம் விடுத்து விலக்கைநன்காய்
மதிக்கின்ற மாந்தர்க்கு நெஞ்சமுன் ஈந்த மலத்தனருள்
பதிக்கின்ற உள்ளத் தவரொடு நின்பதம் பற்றநெஞ்சில்
உதிக்கின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (19)

உடுக்கின்ற தூசுக்கும் உண்கின்ற வாறுக்கும் ஒங்குமுடல்
அடுக்கின்ற மங்கைக்கு நெஞ்சமுன் ஈந்த அவலனிற்குக்
கொடுக்கின்ற ஆறினுக்(கு) ஒவ்வா எனைநின் குளிர்பதத்தில்
ஒடுக்கின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (20)

விழிக்கின்ற நாட்டத்தை உன்பால் அகற்றி வெருட்டித் தன்னோ(டு)
அழிக்கின்ற மாதை உளத்தே அமைத்தென் அறிவையறப்
பழிக்கின்ற தீதைஉன் நோக்கால் எரித்துன் பதத்திலென்னை
ஒழிக்கின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே (21)

சிதைத்ததுன் பாதப் பணியினை வேம்பெனத் தீங்கரும்பாய்
இதத்ததென் அங்கப் பணியைஎந் நாளும் இயற்றநெஞ்சை
வதைத்ததிவ் வாணவம் யான்நீய தாக மதித்ததனை
உதைத்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (22)

அரக்கினை ஒத்ததென் ஆவிநின் பாதம் அழலைஒத்து

நெருக்கிய நீநிற்க யான்மலத் தோடு நிறைந்து பொய்யிற்
செருக்கிய காமத் துடனாகச் சித்தத்தைச் சேர அத்தோ(டு)
ஒருக்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (23)

புளித்தது நின்பதத் தன்புபொய் யாகத்(து) இளமை இன்பாய்க்
களித்தது மாதர் கழைத்தோ ளினைக்கல்லுக் கண்டதென
அளித்ததென் உள்ளத்(து) அவலத்தை மாற்றி அடியருடன்
ஒளித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (24)

மரிப்பித் தவனலை வானாய் எனக்கு மரிப்பதனை
அரிப்பித் தவன்நீ மலமேல் குருடாய் அகமகிழத்
தெரிப்பித்த வாறுற்(று) அளிப்பைஅத் தீதைத் திருக்கரத்தால்
உரிப்பித்த் வாறென்கொல் தில்லையுள் ஆடிய உத்தமனே (25)

துயில்கின்ற போதும் விழிக்கின்ற போதும் துளங்கிநெஞ்சைச்
செயிர்க்குள் அடக்கிய(து) இல்லமன் றோஉளஞ் சேர்ந்ததெல்லாம்
கயக்கும் படிசெய்து நின்றாள் நினைக்கும் கருணைதந்தாய்
உயிர்க்கின்பம் நீயல்ல(து) இல்லைகண் டாய்தில்லை உத்தமனே. (26)

துதிப்பேன்நின் பாதத் தவர்போல் துலங்கித் துதித்தவர்போல்
மதிப்பேன் அலேனெஞ்சின் மாயங்கள் மாய மதித்த அன்பைப்
பதிப்பேன் (அ)லேன்மிக்க அன்பரைப் பற்றிப் பணிந்தடியில்
உதிப்பேன் எவ்வாறுசொல் தில்லையுள் ஆடிய உத்தமனே. (27)

அணைக்கின்ற தாக மருளே புகுத்தி அகத்திருளைத்
துணிக்கின்ற தாக அவ்வாறதில் லாமல் துடர்ந்திருளால்
பிணிக்கின்ற மாதரிற் பித்துமுற் றாக்குமென் பேதைநெஞ்சை
இணைக்கின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (28)

பசித்ததிவ் வங்கத்துட் பார்த்ததென் ஆவி பசியடங்கப்
பொசித்ததிவ் வங்கமிவ் வங்கத்தை யானெனப் பூண்டுபொய்யில்
வசித்ததென் புந்தி அறமாற்றி நின்னருள் மன்ன இந்நாள்
இசித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (29)

பூட்டிய(து) ஆகம் பொசிப்பே பொய்ப் போகமென் போதமறக்
காட்டிய தாம்மலம் காயமும் நீயறக் காட்டுகையால்
ஆட்டிய தாகும் மலமேஎன் ஆவி அருளையிந்நாள்
ஈட்டிய வாறென்கொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (30)

மூத்தவன் நீயலத் தீமலம் போலும் முளைத்துமுந்தி
ஆர்த்தது காயத்தும் போகத்து மாக அடக்குகையால்
நீத்தனன் உன்னைத் தவரொடு நின்பதம் நீக்கமற
ஈர்த்ததெவ் வாறுகொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (31)

பார்த்ததெத் தன்மையத் தன்மையைப் பார்க்கப் பரிந்தருளைச்
சேர்த்ததெத் தன்மைஅத் தன்மையை நோக்கித் திரிமலத்தை
நீத்ததெத் தன்மைஎன் னோடுடல் போகமும் நின்கையுற
ஏற்றதெத் தன்மைசொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (32)

கருப்பித்துக் காயம் அதனொடும் ஒடிக் கருதுமையல்
நிரப்பித்துப் பித்துநின் பாதத்தை நோக்கும் நெடியஎன்னை
மரிப்பித்துப் பித்தன்நின் பாதத் தவரொடு மன்ன அத்தீ
எரிப்பித்த வாறென்கொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (33)

தலையிற்ற நான்முகன் தண்பாற் கடலில் தயங்குமிக்க
அலையுற்ற மாலும் அறியாத் திருப்பதம் ஆகமுற்றுங்
கலையுற்ற நெஞ்சனப் பாதத்து ளாடக் கருதியிந்நாள்
இலையித்த வாறென்கொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (34)

பாய்ந்தது நின்றன் அடியென்றன் ஆவியுட் பற்றலின்றித்
தோய்ந்தது தீய மலத்தொடுந் தொல்லைத் துகளதற
நீந்திய உள்ளத் தவரொடு நின்கழல் நிற்கவுன்னை
ஈந்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (35)

பிடித்ததெவ் வாறதவ் வாறு மலமுளம் பின்னமற
நடித்ததெவ் வாறதவ் வாறு நடுங்க நடிக்கும் அருள்
தடித்ததெவ் வாறு தடிக்கும் தவரொடுஞ் சாரமையல்

இடித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (36)

சாந்திய மெய்யும்நின் பாதத்து நோக்கும் தரித்தஎன்பால்
போந்திய தாகிலப் பொய்யே திரட்டிப் பொருந்துமென்னை
மாந்திய தாகநின் பாதத் தவரொடு மன்னஎன்னை
ஏந்திய வாறென்கொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (37)

எழுத்து விதிக்கை விதியே அளிக்கும் என் ஈச அம்மால்
அழித்துப் பிறப்பிப்பை மாலய னோரைஅம் மக்கணிற்க
குழுத்தவ ரோடுநின் பாதத்தை நோக்கிக் குறுகஎன்னை
இழுத்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடும் இறையவனே. (38)

ஆழ்த்திய சொல்லியர் அங்கப் பயோதர ஆரிருளால்
ஊழ்த்திய நோக்காலென் நோக்கை அடைத்தனர் உற்ற அன்பாய்
வாழ்த்திய வாய்சுகப் பந்தால் அடைத்தனர் மாமருளைத்
தாழ்த்திய வாறென்கொல் தில்லையுள் ஆடியு சங்கரனே (39)

பெருக்கிய அன்பைநின் பாதத் தகற்றியென் பேரறிவைச்
சுருக்கிய மாதர் முலைமீ(து) அழுத்திய துட்டனிந்நாள்
கருக்கிய தீயினைக் காலால் அடர்த்துனைக் காதலித்துத்
தருக்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (40)

சொலிற்பித்தும் மாதர் துணைத்தோள் இனையவர் துங்கபங்கம்
புலிற்பித்துப் போக்கு வரவொடும் பூட்டிப் பொருந்தத்தன்பால்
வலிப்பித்த பித்தன் எனைத்தான் பிடித்து மருவநின்பால்
சலிப்பித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (41)

மங்குமிவ் வங்கம் மதிவான் உலகத்தை மன்னுமங்கை
கொங்கையில் இன்பங் குறித்தன மாகில் குறித்ததந்தோ
பொங்கிய தீய நரகே புகச்செயும் பொய்யனின்றாள்
தங்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (42)

நடையட்டள் தாய்மனம் தந்தையட் டான்மங்கை நாட்டநின்பால்

தொடையட்டள் மக்கள் கரமே துடைத்தனர் சுற்றரெம்வாய்க்
கொடையட் டனரிவர் எல்லாம் குலையக் குறித்தடியேன்
தடைபட்ட வாறென்கொல் தில்லையு ளாடிய சங்கரனே. (43)

விதிபட்ட துன்கை உகிரின்முன் சூலத்தின் விண்டுஅங்கம்
பதிபட்ட காமன் விழிபட்ட பாடு படுத்தலின்றோ
மதிபட்ட நீஎன் உளத்தே இருக்க மதிமலத்தின்
சதிபட்ட வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (44)

கவிர்பட்ட செப்புப் பயோதரக் கண்ணென்கண் கல்மனம் போய்
அவிர்பட்ட வாய்தனில் கால்கள் அமைத்தங்(கு) அளவதில்லாக்
குவிபட்ட தீப்பவம் யான்வெறுத் துன்னைக் குறுகமங்கை
தவிர்பட்ட வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (45)

ஆவிய தல்ல அஞ்ஞான மெஞ்ஞான்றும் அறிவதெனக்
கூவிய தாமறை யானற ஆனந்தங் கூட்டியநீ
மேவிஎந் நாளும் விடாதுடல் சிற்றின்பம் வெஃகியதைத்
தாவிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (46)

வரிப்பித்து மக்கள் மனையொடு செல்வம் வார்தொழிலின்
நிரப்பித்துத் பித்தைஎன் நெஞ்சிலெந் நாளும் நெடிய அன்பைப்
பரப்பித்தி லேனையும் பாதத்தை நோக்கிப் பணியநின்பால்
தரிப்பித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (47)

நாவித்துப் பாவம் நவிற்றி நவையுற நாடியென்றும்
பாவித்தல் உள்ளம் இதத்தோ(டு) அகிதப் படுத்திமலம்
மேவித்துத் தீவினை வேறாக்கி உன்னை விரும்ப என்பால்
தாவித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (48)

புழுவிய தாகம் புகுந்தனன் நானுன்றன் பொன்னடியை
வழுவிய தாலின்ன மன்னநின் பாதத்தை மன்னலின்றி
நழுவிய தாமென்னை நன்மா மலரடி நண்ண இந்நாள்
தழுவிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (49)

நெறித்தனள் மங்கைதன் நெற்றிப் புருவத்தை நீசிவத்தைக்
குறித்தனை யேன் எனப் பற்கடித் தான்தந்தைகூழைகையால்
பறித்தனள் தாய் அறப் பாசப் பகைகள் பதைக்கக்கண்ணால்
தறித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (50)

இடைப்பட்ட மாதர் தனக்கிரி மீதில் எடுத்துக்கண்ணால்
உடைபட் டிட உருட் டிப்பின்னும் மேலும் உயர்த்தித்துன்பப்
படைபட்ட யானுன்றன் பாதத் தவரொடும் பற்றிநின்பால்
தடைபட்ட வாறென்கொல் தில்லையுள் ஆடிய சங்கரனே. (51)

முளைத்ததென் ஆவி மலத்தோ டடங்கி முழுதுமதாய்க்
கிளைத்தது வாகும் கரணங்க ளாகக் கெழுமிப்பொய்யை
விளைத்தது வாகும்மிக் கோரொடுங் கூடி விரும்பநின்பால்
வளைத்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய மன்னவனே. (52)

தொழுத்திய தல்லச் சுகம் உனை நோக்கித் துதிக்குமங்கைக்
குழுத்திய(து) உன்னைக் குறுகாக் கொடுந்தொழில் கூட்டிநெஞ்சை
அழுத்திய தீதை அகற்றிநின் பாதம் அடைந்தடியேன்
வழுத்திய வாறென்கொல் தில்லையுள் ஆடிய மன்னவனே. (53)

ஊழ்வித் திதாகிதம் அங்குரம் காமம் உளத்துமுளை
சூழ்வித்து வஞ்சிப் பயோதரக் கொம்பதைச் சுற்றிவிடாக்
காழ்வித்து நின்பதக் கொம்பிற் படர்ந்துமெய் காய்க்களன்னை
வாழ்வித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய மன்னவனே. (54)

உரிப்பித்த வாபித்தை உள்ளொளி யோடொளி ஒக்கநெஞ்சில்
தெரிப்பித்த வாவினை யாவையுந் தீர்த் திருவிழியால்
எரிப்பித்த வாதிருப் பாதத்துள் என்னை இருத்திஇன்பாய்
மரிப்பித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய மன்னவனே (55)

உருத்திய தென்னஎன் உள்ளத்தின் ஒர்ந்ததற் கோருடலை
இருத்திய வாறும் இழந்தெனிந் நாளிதை இன்பமெனப்
பொருந்திய தீமலப் பொய்யைஎற் காகநின் பொன்னடியால்

வருத்திய வாறென்கொல் தில்லையுள் ஆடிய மன்னவனே. (56)

குணங்கிய தன்றுநின் பாதத்து நோக்குக் குறித்தவுள்ளம்
பிணங்கிய தீமலப் பெற்றிய தாமதைப் பேதமற
இணங்கிய தாலுனை யானேத்து கில்லேன் இதைப்பிரிந்து
வணங்கிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய மன்னவனே. (57)

தொழுவேனின் பாதப் பரிசைமிக் கோரெனச் சூழ்ந்தடியில்
அழுவேன் அவரென உள்ளமவ் வாறன் றகமகிழ்ந்து
விழுவேன் செகத்துள்நின் பாதத்தைவேண்ட விருப்பமந்ததோ
வழுவேஎவ் வாற்றுந் தில்லையுள் ஆடிய மன்னவனே. (58)

புளிப்பட்ட தாமிரம் போலுமென் ஆவிநின் போதமுற்றார்
உளிற்பட்ட காலம் அறக்களிம் பென்னஎன் உள்ளமையல்
ஒளிப்பட்ட தாகும்மிக் கோரொடு நின்னபடி உன்ன இந்நாள்
வெளிப்பட்ட வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (59)

துளைத்தது காமன் பகழியென் நெஞ்சைச் சுடுநெருப்பாய்க்
கிளைத்தது வான்மதி தீர்க்கும் மருந்தெனக் கேடிலருள்
முளைத்தது மாதின் முயக்க மருந்தென முற்றிப்பொய்யா
விளைத்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய வித்தகனே (60)

தெரிவித்த நின்னருட் பாதக் கதிரென்றன் சித்தம்புக்குப்
பிரிவித் தக இருள் யானீய தாக்கிப் பிரிவிலுடல்
வருவித்த தன்பணிக் காய்வினை நிற்கென மன்னிநின்பால்
விரிவித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (61)

இரவிய தாம் அருள் ஆவணம் தீதிருள் ஏயுமுடல்
மருவிய நீதந்த தாயுமுன் பாதம் மறைத்திருளாய்ப்
பரவிய தாமலம் வேறதுவாகப் பரிந்தென்நெஞ்சில்
விரவிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (62)

ஒடுக்குமென் தாய்பரி வால்தந்தை வஞ்சத் துலகியல்பாய்

அடுக்குமின் னார்புலன் ஐந்தால் அடக்க மிக உருவால்
தடுக்கும் புதல்வரிப் பாசப் பகையறச் சார்ந்தருளில்
விடுக்குமெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (63)

துலக்கும் அறிவினைக் காயம் வினையுமத் தூய்மையதாய்க்
கலக்கும் மலங்கல வாவிடின் காமன் கணைக்குநெஞ்சம்
இலக்கு மலக்கதிர்ப் பாதத்தை நாட்டி இருளகத்தில்
விலக்குமெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (64)

சுடுகின்ற தோர்புறம் காமமற் றோர்புறம் சூழ்பசித்தீ
அடுகின்ற தோர்புறம் நோயொரு பாலில் அமர்கையினால்
தொடுகின்ற வாறெங்ஙன் நீயென யாவையுந் துன்பமென
விடுகின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (65)

நடக்கின்ற தீது நடவாத தீதென நாட்டியருள்
கொடுக்கின்ற ஆரியன் தன்பால் இருந்தும் கொடுவினையால்
அடுக்கின்ற மாதர்க் கவாவுமென் நெஞ்சறி யாமையற
விடுக்கின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (66)

தொடுவித்த் மெய் ஐம் புலனறி யாமை துடைத்தற்கருள்
குடிவைத் திட அன்பு நின்பால் அறமலம் கொங்கைமின்மைப்
படிவைத்துத் தன்வச மாக்கும் புலனெறி பற்றிஅதை
விடுவித்து வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (67)

உதித்தனை நெஞ்சத்துள் நீஎன்றன் ஆவிஉன் னோடுறவாய்
மதித்தன வந்தவை நிற்காய் மலத்தொடு வந்ததெல்லாஞ்
சிதைத்தன தீய பிராரத்த தேகமுஞ் சீவனுக்காய்
வித்ததெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (68)

இரும்பிய லாகுமென் நெஞ்சம்பொய் மாதர்க் கிசைந்தருளின்
திரும்பிய தாலென்ன தீவினை யோமலம் தீத்தனுவைக்
கரும்பிய லாக்கிநின் அன்பரை வேம்பெனக் காட்டுமிதால்
விரும்பிய வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (69)

இலையுற்ற ஆணவம் நீபே ரறிவு எழிற்பகழி
முலையுற்ற ஆதி முடித்தாமம் ஆகும் முழுமதியாங்
கலையுற்ற துன்சடை காமன் கருதிக் கணைதொடுப்பான்
விலையுற்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (70)

நினையுற் றிடுமென் அறிவு மனம்பொறி நின்பணியாந்
தனையுற் றிடுவது யானறி யாமையைச் சார்தலின்றால்
பினையுற் றிடுவதென் தேகப் பிராரத்தப் பெற்றியிரு
வினையுற் றிடுவதென் தில்லையுள் ஆடிய வித்தகனே. (71)

ஆவிநின் பாலன்பென் அங்கமும் நின்பணி அங்கமொன்றைத்
தாவில துன்செயல் யானோ எனக்கிலைத் தத்துவத்தால்
ஆவதொன் றெற்கிலை யாமாலென் பால்விட் டகன்றவினை
மேவிய வாறென்கொல் தில்லையுள் ஆதிய வித்தகனே. (72)

கொனையுற்ற தாமலம் யானறி யாமைக் கொடுங்கருவி
யினையுற்ற வாறெங்ஙன் மாறா உடலம் பிறக்கவினை
தனையுற்ற வாறெங்ஙன் ஈன்றாள் தரிக்கத் தரிக்குஞ்சத்தி
வினையுற்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (73)

முளைக்கின்ற காலும் முளைக்குமுற் காலும்பொய் மோகநெஞ்சில்
கிளைக்கின்ற தாலதற் கேற்ற தனுவினைக் கிஞ்சனுற
வளைக்கின்ற வாக்கினை நின்செயல் மற்றுமென
விளைக்கின்ற வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (74)

திரிவித்தென் நெஞ்சத்தைத் தீவினை யாவையுந் தீங்கரும்பாய்
வருவித்துத் தீய பிறப்பினை ஆக்கும் மலமதற
விரிவித்த நின்செயல் பொய்யாத தீதையும் ஐயனீயாய்
விரிவித்த வாறென்கொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (75)

உதிக்குமுற் காலுமெக் காலத்தும் உள்ளத்தை உற்றுமலம்
சதிக்கும் பிறவிக்குத் தானுட னாக அச் சத்தியற
மதிக்குநின் சக்தி மருளாய் மயக்கமும் மன்னநியாய்

விதிப்பதெவ் வாறுசொல் தில்லையுள் ஆடிய வித்தகனே. (76)

**"அதிசய மாலை" முற்றும்**

---------------

## திருவாவடுதுறை ஆதீன பண்டார சாத்திரம்

## அருள்திரு அம்பலவாண தேசிகர் அருளிய " சித்தாந்த சிகாமணி"

சாதித்த தெல்லாம் தவமேனும் சற்குருவைப்
பேத்தால் எல்லாம் பிழையாகும் - வேதத்(து)
அறம்புரிந்த தக்கனுக்கன்(று) ஆக்கினைவந்துற்ற
திறம்புரிந்த வாறாம் தெளி. (1)

வஞ்சமே செய்வாய் மருவுங் குருவோடு
நெஞ்சமே நீகதியில் நிற்பதெந்நாள் - கொஞ்சி
உருகித் தமரோ(டு) உறைவாய்நன் முத்திக்(கு)
அருகமென்பது எவ்வா(று) அறை. (2)

நாமெங்கே முத்தி நடையெங்கே நன்னெஞ்சே
தீமங்கை இன்பே திளைகுமால் - காமன்கை
அம்புற்ற புண்மெய்யில் ஆறியபோ(து) அன்றோதன்
செம்பொற்றாள் ஈவான் சிவன். (3)

சலக்குழியின் மிக்க சகதியில்லை அங்கச்
சலக்குயை இன்பே திளைகுமால் - காமன்கை
அம்புற்ற புண்மெய்யில் ஆறியபோ(து) அன்றோதன்
செம்பொற்றாள் ஈவான் சிவன். (4)

ஒளியானும் உற்ற இருள் மாதருமே ஒத்துத்
தெளியநடஞ் செய்வதனைத் தேரின் - ஒளிநடத்தைக்
கண்டபே காணார் கருதி இருள்நடத்தைக்
கண்டபேர் காணார் கதி. (5)

தாணுவினோ(டு) ஒத்துச் சரியாய் நடம்புரியும்
வாணுதலார் கூத்து மறைப்பல்ல - ஆணவத்தை
ஒட்டியபேர்க் கெல்லாம் ஒளிப்பான அரன் அதனைத்
தெட்டியபேர்க் காமாந் தெரிவு. (6)

கூட்டித் தனுவைக் குறித்துயிர்மேல் நின்றீசன்
ஈட்டுவிக்கச் செய்யும் இயல்பாமால் - நாட்டுமலம்
இல்லையென்ப தாகும் இசைந்த கருனைநலம்
அல்லவென்ப தாமாம் அரற்கு. (7)

தோற்றம் இறப்பும் சொலுமீசன் தன்செயலென்
மாற்றுதற்கு வேறொருத்தர் மன்னுவதாம் - சாற்றும்
அரவு கடித்தவிடம் ஆங்கதனை மீட்க
வருமவர்போ லாமாம் மதி. (8)

மலமே பிறப்பிறப்பை மன்னுவிக்கும் ஈசன்
நலமே அவையகற்றி நண்ணும் - மலமருக்கன்
சன்னிதியில் நில்லாத் தகுமிருல்போல் தக்க அரன்
சன்னிதியில் நில்லாது தான். (9)

பேதித்து நெஞ்சம் பிரியாமால் நின்றீசன்
சாதித்து திடக்கருவி தந்ததால் - ஆதித்தன்
காட்டுவதே போலெவர்க்கும் காட்டுவதே அல்லால்பொய்
ஈட்டுவிக்கச் செய்யான் என் றெண். (10)

வாதித்த தேது மலமாமால் ஆங்கதனைச்
சேதித்தல் ஈசன் திறமாகும் - ஆதித்தன்
போலெவர்க்கும் காட்டிப் பொருந்துவதே அல்லால்பொய்
மாலெவர்க்கும் வையான் மறந்து. (11)

அன்னியத்தில் தன்னினைவை ஆக்குவார் தங்களுக்கும்
மன்னி அரன் பால்நினைவை வைப்பார்க்கும் - தின்னும்
தனுவினையை ஈயத் தகுவதல்லால் மோக
நினைவினைஉற் றீயான் நினைந்து. (12)

காட்டும் கதிரவன் அக்கண் அதனுக் கில்லைமுன்
ஈட்டும் பொருள்மே இசையுமால் - கூட்டும்
அரனெவர்க்கும் இல்லைம்ற் றாற்சகமே நோக்கி
வருமதனால் நெஞ்சே மதி. (13)

சுத்தம் அசுத்தமெனச் சொல்லியவோ ராங்கவைக்கும்
அத்தன் பிரேரகமே ஆகுமால் - பித்தருக்கங்(கு)
அன்னியத்தை நோக்கி அறிவிப்பான் மற்றவர்க்குத்
தன்னையே நோக்குவிப்பான் தான். (14)

பேதித்தார் தங்களுக்கும் பின்னமறத் தம்மடியில்
சாதித்தார் ஆர்க்கும் சரியேனும் - வதித்த
தீய மலமறுப்பான் சேர்ந்தார் தமக்கடியை
ஐயமறச் சேர்ப்பப்பான் அரன். (15)

எல்லார் நினைவுக்கும் ஏற்றபடி யேகருணை
நல்லான் பிரேரிக்கும் நன்மைகேள் - பொல்லா
வினையிருத்து வார்க்கும் விரும்பியதோர் முத்தி
தனையிருத்து வார்க்குஞ் சரி. (16)

எல்லார் நினைவுகும் ஏற்றபடி யேகருணை
வல்லான் தனுவினையை வைத்தநெறி - பொல்லா
மலமறுப்ப தாமால் வருநரக சொர்க்க
நிலையிருத்து வானேல் நினைந்து. (17)

ஆவியின்மேல் இச்சை அடைவதல்லால் ஆங்கதன்மேல்
கோபமே இல்லை குறிக்குங்கால் - மேவியதோர்
ச்ன்னியத்தில் இச்சை அகற்றி அறி வானந்தத்
தன்னியல்பே ஆக்குதற்குத் தான். (18)

மலமெ அறியாமை மற்றுயிரைத் தீண்டும்
நிலையே அதற்கிலவாய் நிற்கும் - மலையா
அறிவே உயிர்க்காமால் ஆங்கதன்மேல் ஏறும்

பிறிவதற்காய் உற்றதெண்டப் பேறு. (19)

நின்மலமாய் ஆவி நிகழ்மலத்தைப் பற்றுதற்கு
முன்மலமொன்(று) உண்டாய் மொழிவதாம் - பன்முதலும்
உள்ளபோ(து) ஆவி ஒருப்பட்டுப் பின்மலத்தைத்
தள்ளுங்கால் நின்மலமாம் தான். (20)

தண்டி மலமுயிரைத் தாவுமேல் ஆவிக்குத்
தெண்டிப்பே இல்லையெனச் செப்புவதாம் - அண்டி
உயிருக்கு புத்தி உரைப்பதல்லால் தீய
செயிருக்(கு) உரைப்பதில்லைத் தேர். (21)

வசிப்புண்டார் தம்மை வசிக்குமலம் தேவால்
தெசிப்புண்டால் ஆங்கவனைத் தீண்டா - நசிப்பில்லாக்
கண்ணை மறைக்குங் கடிய இருட்கதிரை
நண்ணியகட் கின்றாம் நவை. (22)

மலமே தெனவேண்டா மற்றுயிர்மேல் நின்ற
புலமேல் எழுந்தநெடும் பொய்யாம் - இலமேல்
இருந்(து) அவத்தைச் செய்யாதே ஏதேனும் ஈசன்
தரும் தவத்தை நெஞ்சே தரி. (23)

அறியாமை என்றும் அகண்டிதமால் ஆவி
பிறியாமல் நிற்குமந்தப் பேறால் - குறியாம்
தனுவோ(டு) இசையினும்பின் தக்கவினை தானாம்
நினைவோ(டு) இசையின்மால் நேர். (24)

ஆசைப் படுவாரை ஆசைப் படுத்துவித்தல்
பேசும் உலகியல்பின் பெற்றியால் - மாசுமலம்
உற்றாரைப் பற்றி உறுவதல்லால் ஒவ்வாமல்
அற்றார்மேற் செல்லா(து) அறி. (25)

பித்தமுற்றார் தங்களுக்குப் பித்தகல நன்மருந்தை

மத்தகத்தில் தேய்த்து மறிப்பதல்லால் - புத்திசொல்லி
மாற்றியபேர் உண்டோ மலந்தவர்கள் ஆவியின்மேல்
தோற்றுவதே இல்லைத் துணி. (26)

பிடித்தார் தமைப்பிடிக்கும் பேராச் சடமும்
விடுத்தார் தமைவிடுக்கும் வேறாய் - அடுத்தமலம்
தொட்டபேர் தம்மைத் தொடுவதல்லால் தொல்லுயிரைக்
கட்டிப் பிடிப்பதில்லைக் காண். (27)

சத்திநி பாதம் சதுர்விதமால் தீயமலம்
முத்தியிலும் நிற்கும் முறையென்னின் - சுத்தமரன்
பாலே எழும் அவன்தன் பண்பால் அறியாமை
மாலே அறுக்குமென மன். (28)

மாசற்றார் நெஞ்சின் மருவும் அரனின்றும்
பாசத்தார்க் கின்றாம் பதியென்னில் - ஈசன்
சரியாதி நான்கில் தகுமலமே கேடாய்
வருமால் இலையாய் மதி. (29)

தீக்கைக்(கு) ஒதுங்கிச் சிதைந்தமலம் தன்வசமே
ஆக்குதலைச் செய்ய அறியாவாம் - நோக்கி
மலமே உளதென்று மன்னுவதே அல்லால்
பெலமேதும் இல்லையெனப் பேசு. (30)

இருவினையும் ஒத்தால் இசைந்த அரற் கன்பு
மருவுதலால் உண்டோம் மலமால் - உருவினுக்கங்(கு)
ஒத்த பிரார்த்தமரற் கூட்டுதலால் தீயவினை
தொத்துதலே இல்லையெனச் சொல். (31)

சேதித்த சேடம் செயற்படுதல் அங்கத்தை
வாதித்த நோய்மாறி வந்ததுவாம் - ஆதித்தன்
முன்னிருல்போல் தீயமலம் முற்றும் சரியாதி
தன்னிலையில் நிற்பார்க்குத் தான். (32)

ஒத்த மலத்தோ(டு) உறுவாரைத் தீயநெறிப்
பெத்தரென்ப தாகப் பெறுவதாம் - சித்த
மலத்தை வெறுத்து வரும் அரனை நோக்கும்
நலத்தாரை முத்தரென நாடு. (33)

மலமுற்றா ரேனும் மன்னுமரன் பாத
நிலையுற்றால் அம்மலமும் நீங்கும் - புலமுற்றும்
பேதித்த மும்மலத்தின் பெற்றியறப் பெற்றியறச்
சாதித்தார்க்(கு) இல்லைமலம் தான். (34)

சரியைக்(கு) அனுக்கிரக சத்திகா லாக
வரிசைத் தவத்தோடும் வைத்துத் - தெரிசிக்க
ஈசனே யாகும் எனுமுறைமை எவ்வுயிர்க்கும்
நேசமே யாகும் நிறைந்து. (35)

மலம்நாலத் தொன்றாக் மாறும்பின் ஈசன்
குலம்நாலத் தொன்றேற்கக் கூறும் - பெலமாம்
இருவினையும் ஒப்பாம் இசைந்ததனுப் போகம்
தரும் அரற்கே யாகத் தரும். (36)

நின்ற மலமதனை நீண்ட அரன் பாலன்பால்
கொன்றிடுவ(து) என்றும் குணமாகும் ஆல் - துன்றும்
சரியாதி நான்கில் தகுமரனே தானாய்
வரலால் இலையாம் மலம். (37)

சரியாதி நான்கும் தகுமலத்தை வென்று
வரவரவே சித்தமெனும் மாண்பாம் - புரையறவே
ஒன்றாகி நிர்பார் உறுசிவமே ஒத்தவர்பால்
சென்றார்க்குத் தீர்க்குமலத் தீ. (38)

தீக்கைகு காலாகச் சிந்துமால் தீயமலம்
போக்குக்(கு) ஒதுங்கிப் பொருந்தியதால் - ஊக்குமரன்
சேட்டையே மேலாகச் செல்லுங்கால் ஆங்கதுவும்

ஒட்டமே யாமா றுணர். (39)

சுத்தமென நான்கினையும் சொல்லியது நற்கருணை
அத்தம்மேல் பத்தி அடைதலால் - பெத்தம்
மலத்தோ(டு) இசைந்துநின்று வாழ்வார்க்காம் தீக்கைக்
குலத்தோரைச் சுத்தமெனக் கொள். (40)

மலத்தார் தமக்கு ஆகும் மன்னுபிரா ரத்தம்
இலத்தான் நரகசொர்க்க மேய்வாம் - நலத்தாகும்
ஈசன்பால் நோக்கி இசைவார் சாகோக
நேசமே ஆவார் நிறைந்து. (41)

மலமொன்(று) அகற்றப்பின் மற்றதெல்லாம் ஈசன்
நிலையொன்ற தாகமிக நிற்கும் - மலைவின்றி
ஈட்டியவா(று) ஆகும் இறையெவர்க்கும் தீயமலம்
வாட்டுயவா(று) ஆகும் மதி. (42)

பெத்தமுத்தி என்னப் பிறங்கும் உருத்தன்மை
ஒத்த படிகத்(து) ஒழுங்காகும் - சுத்தம்
வரிற்போ(து) ஒளியாகும் வாராத போதிங்(கு)
இருட்போதம் ஆகுமென எண். (43)

ஆவி இவைஇரண்டும் அல்லவாம் தீயமலம்
மேவிப் போய்ப் பித்தாய் விளங்குதலால் - தாவுமான்
ஒத்துப் சுதந்திரமாய் ஒன்றுதலால் உண்மையுற்ற
சித்தமவன் ஆகுமெனத் தேர். (44)

தத்துவமே விட்டார்க்குத் தத்துவமென தம்மறிவை
அத்தனுக்கே ஈந்தார்க்(கு) அகம் ஏனாம் - சுத்தன்
அரனே எனுமால் அகன்ற உடற் போகம்
வருமே அவன்தாள் மதி. (45)

பெத்தருக்கெ ஆகும் பிராரத்தம் தீயமலப்

பித்தே தனுவினையாம் பெற்றியால் - சுத்தம்
சிவனே எனுமால் சிறந்தவுடற் போகம்
அவனே எனும்வழுக்க தாம். (46)

பித்தமுற்றார் துய்த்தலந்தப் பித்தமால் பேராத
சுத்தமுற்றார் துய்த்தலுமச் சுத்தமன்றோ - ஒத்த
தொழிலனைத்தும் ஆங்கவையே சொல்லியதோர் ஈசன்
எழிலனைத்தும் தானாம் என்(று) எண். (47)

பச்சிலையைத் தின்னும் பசும்புழுவைச் செங்குளவி
நச்சியிட அப்புழுப்போய் நண்ணியதால் - இச்சித்துத்
தோற்றுமிலை உண்ணத் துணியாது தொல்பிறவி
மாற்றியபேர்க் கிவ்வாறாய் மன். (48)

வினையற்றால் அங்கம் விடுவாம் மனுவாம்
தனுவுற்றால் அவ்வினையச் சார்வாம் - நினைவுற்று
அரனாய்த் திரிவாக்கங்(கு) ஆங்கரனே போக
தரமால் கருணையுருத் தான். (49)

ஊக்கிய காமம் உயர்சிவமாம் உற்றதனுத்
தாக்கும் செயலே தரும்வாக்காம் - நீக்குமல
வேதனையே மாற்றி விடுமால் மிகுங்கருணை
நாதனவன் தானே நமக்கு. (50)

ஊக்கிய காமம் உறும் இலமாம் உற்றதனுத்
தாக்கிஞ் செயலே தகுமதற்கால் - ஆக்குமரன்
பேதமென நோக்கிப் பிறியுமால் தீயமலப்
போதமென நெஞ்சே புகல். (51)

இருளில் எழும் ஒளிமற்(று) ஆங்கே யிருளும்
வருமொளிமேற் செல்லுதற்கு வாரா - அருளும்
மலமேல் எழுமலமும் மாற்றியருள் மேலே
செலநினைவ(து) இல்லையெனத் தேர். (52)

மலமக மாயா தனுவகலும் கன்ம
நிலையகலப் புரணமாய் நிற்கும் - மலைவறவே
போக்குதலைச் செய்வான்தன் பொன்னடிமேல் நின்றவர்மேல்
ஆக்குதலைச் செய்யான் அரன். (53)

மலமுற்றார் துய்ப்பர் மலமே மனுவாம்
நிலையுற்றார் உண்பர்மனு நீதி - அலைவற்ற
ஞானத்தார் துய்ப்பர் நயந்த அருள் நற்றனுவாம்
ஆனத்தால் ஒட்டியதோர் ஆறு. (54)

பெத்தருக்கே ஆகும் பிராரத்தம் பேராத
முத்தருக்கே இன்றாய் மொழியும்நூல் - சித்தம்
அறியாமை மாற்றி அடங்குமால் முத்தி
பிறியாத நான்குமருட் பேறு. (55)

முத்தருக்கே ஆகும் மொழியுமருள் மந்திரமே
சித்தமரன் பாலே செலும் அதுவே - ஒத்த
தனுவுமது வாகத் தகுமேமெய்ப் போக
மனுவே அதுவாமவ் வாறு. (56)

மந்திரத்தை உற்று வருந்தனுவை நீத்தோர்கள்
புந்தியர னாகப் புகுமாமால் - வந்ததனு
ஆங்கவனே ஆமால் அதற்கிசைந்த போகமெலாம்
நீங்கா மலமறுக்கும் நேர். (57)

இருவினை ஒப்பில் இசைந்தவுயிர் மாறி
வருமால் தனுவினையவ் வாறாம் - இருவனையும்
சித்தமுற்ற வாறே திரும்புமால் ஒர்படித்தாய்ப்
பெத்தமென்ப தல்லவெனப் பேசு. (58)

ஒத்த பதத்தை உறுவிக்கும் தாபரமால்
சித்தமலஞ் சங்கமமே தீர்க்குமால் - அத்தனென்றும்
ஆவியே நோக்கி அணையுமால் அற்றாரை

மேவியே நிற்பன் விரைந்து. (59)

ஈசனாய் எல்லா உயிர்க்குயிராய் நிற்பானும்
ஈசனாய் பூசைக்(கு) இசைவானும் - ஈசனாய்ச்
சாலோக மாதிப் பயனளித்து நிற்பானும்
ஆலோக லிங்கமென மன். (60)

மனவாக்குக் காயம் மருவா அரனே
மனவாக்குக் காயம் மருவி - நினைவார்க்கு
மூவுருவே யாகி முதன்மைசிவ லிங்கமாய்
ஏவுருவங் காண்கைக்(கு) இசைந்து. (61)

மந்திரமே உற்று வருங்கருணை நன்மவுனத்
தந்திரமே உற்றிருக்கும் தன்மையால் - சிந்தித்து
வந்தார் தமக்கே வரங்கொடுத்து நிற்குமே
நந்தாக் கரிணை நலம். (62)

தெரிசித்(து) அருச்சனையைச் செய்விப்பார் தங்களுக்கும்
பரிசித்(து) அருச்சனையைப் பண்ணி - உரிசித்தி
யோகமே நோக்கி உழல்வார்க்கும் நன்முத்திப்
பாகமேயார்க் கும்லிங்கம் பார். (63)

தானே சிவலிங்கம் தானாகும் சற்குருவும்
தானேநற் சற்கமமுந் தானாகும் - ஆனமையால்
தங்கும் உயிரில் தரித்த மலமாற்ற
எங்குஞ் சிவமேயென்(று) எண். (64)

குருவே சிவலிங்கக் கொல்கையெல்லாஞ் சொல்லி
வருமால் இறையவன்பால் மாலாய் - வருமுயிர்கள்
திய்ய மலமறுத்துச் செய்தியவன் பாலாகப்
பைய நடக்குமெனப் பார். (65)

அங்க மலத்தை அகற்றிஅறி வோடறிவாய்த்

தங்கியதே சங்கமத்தின் தன்மையாம் - லிங்கம்
தனையே வழிபட்டுச் சாருமால் ஆர்க்கும்
நினைவே அதுவாமாம் நேர். (66)

சங்கமமும் மிக்க தகுங்குருவும் லிங்கத்தின்
சங்கமமே உற்ற சதுரினால் - லிங்கத்தை
வந்திப்பா ரானார் வருமுலகர் எல்லாம்பின்
சிந்திப்பா ரானார் தெரிந்து. (67)

நோக்கால் பரிசத்தால் நூலினால் பாவனையால்
வாக்கால்மெய் யோகத்தால் மாற்றுவான் - தாக்குமலம்
ஐந்தினையும் சற்குருவே ஆமால் அறிவென்கை
சந்தயமே இன்றாகும் தான். (68)

எல்லா அறிவும் இசைந்தவுயி ரோடிசைந்து
சொல்லாத போதெவர்க்குந் தோற்றாதாம் - நல்லசிவ
லிங்கமே நூலுரைத்து நில்லாதாம் நீள்கருணைச்
சங்கமத்துக் காகத் தகும். (69)

புத்திசொல்லிப் பொய்யதனைப் போக்கியதும் பூரணமாம்
அத்தன்மேல் நேசமுற ஆக்கியதும் - சித்தம்
ஒருமித்தார் தம்மோ(டு) உறைவதுவும் முத்திக்
கருமத்தால் உற்ற கடன். (70)

ஆவியே ஈசற் கருளுருவே ஆகுமெனக்
கூவுமறை ஆகமத்துங் கொண்டதால் - மேவும்
சிவனே இவனென்று சித்திப்பார் தாமே
அவனாவார் நெஞ்சே அறி. (71)

உபதேசத் தாலும் உறுநூலி னாலும்
பவதேசம் மாற்றுவிக்கும் பண்பால் - சிவனேசர்
போலே இருந்து பொருந்தியதோர் தீமலத்தின்
மாலே அறுப்பன் மகிழ்ந்து. (72)

ஆவி திரிந்தபடி ஆகமாம் ஆங்கதுபோல்
மேவும் வினைதிரிந்து வெற்றியாம் - பாவம்
உறுவார்க்கும் மந்திரத்தை ஒன்றினர்க்கும் ஞானம்
பெறுவார்க்கும் இவ்வாறாம் பேறு. (73)

ஆதலினால் சங்கமத்தை ஆன்மாக்கள் போலேநீ
பேதமென எண்ணிப் பிரியாதே - தீதகல
நோக்குமே எவ்வுயிர்க்கும் நுண்ணியநற் போதமதாய்
ஆக்குமே நெஞ்சே அறி. (74)

மலமகற்ற ஈந்ததனு மன்னியதை ஆங்கே
நிலையகற்றி நின்மலமாய் நின்று - மலைவறுக்கும்
ஈசனோ டொன்றாய் இசையும் இருவினையும்
மாசறுக்கும் மற்றவர்நே ருற்று. (75)

இருந்த இடத்தங்(கு) இருவினையும் ஆங்கே
வருந்தியதோர் அன்பாய் மருவித் - தருந்தவர்க்குத்
திய்ய மலமறுக்கும் செய்தியால் நற்கருணைக்(கு)
ஐயமிலை என்றே அறி. (76)

மூவுருவே எவ்வுயிர்க்கும் முத்தி அளிக்குமால்
மூவுருவில் ஒன்றறவே முத்தியில்லை - மூவுருவும்
ஈசனே தானாய் எழலால் இழிவுயர்வு
பேசுதற்கே இல்லையெனப் பேசு. (77)

ஆசையற்றார்க்கு உண்டோ அகத்துன்பம் நல்லறமாம்
நேசமற்றார்க்கு உண்டோ நிகழ்சொர்க்கம் - பேசுமலம்
அற்றார்க்கும் உண்டோ அணுகுமுடல் தீயகுலம்
உற்றார்க்கும் உண்டோ குரு. (78)

அறமுறைவார்க்(கு) இல்லைப்பொய் ஆயிழைமேல் மோகம்
மறமுறைவார்க்(கு) இல்லை அற மாண்பு - துறவுறையும்
முத்தர்க்கே இல்லை மொழியுமுடல் நற்சிவமாம்

ஐத்தர்க்கே ஆவியில்லைத் தேர். (79)

ஊனுண்பார்க் கில்லை உயிரிரக்கம் ஒண்புசை
தானில்லார்க் கில்லைத் தகுங்கதிநேர் - கோனடியை
சிந்திப்பார்க் கில்லை வருநிரயம் ஆங்கவனைச்
சிந்திப்பார்க் கில்லைமலத் தீ. (80)

சாதியுற்றார்க் கில்லைத் தகுஞ்சமயம் சங்கமமம்
நீதியுற்றார்க் கில்லை நிக்ழ்சாதி - பேதமற்ற
அங்கத்தார் தங்களுக்கங் காவியில்லை ஆவியுறும்
சங்கத்தார்க் கில்லைஉடல் தான். (81)

மனம்கவர்ந்தார்க் கில்லை வருந்துறவு மாயாச்
சினம் கவர்ந்தார்க் கில்லைத் தெளிவே - அனங்கனம்பின்
புண்ணுற்றார்க் கில்லைப் புனிதம் பொருந்துமரன்
கண்ணுற்றார்க் கில்லைமதன் காண். (82)

பொய்யுற்றார்க் கில்லை புகழுடம்பு போகத்தின்
கையுற்றார்க் கில்லை கருதுமறம் - மெய்யுற்றுக்
காமித்தார்க் கில்லை உயிர் காட்டாமல் மேலன்பைச்
சேமித்தார்க் கில்லைச் சிவன். (83)

ஆசையுற்றார்க் கில்லை அருட்செல்வம் ஆங்கரன்பால்
நேசமுற்றார்க் கில்லை நெடியமறம் - மாசற்ற
நெஞ்சினார்க் கில்லை நிகழ்குறைவு தீதைவிட
அஞ்சினார்க் கில்லை அரன். (84)

திருவினை உற்றார்க்குத் தீதில்லைச் செங்கண்
ஒருவனைற் றார்க்குயர் வில்லைக் - குருவவனை
ஐயுற்றார்க் கில்லை அருளுடைமை ஆங்கவன்தன்
மெய்யுற்றார்க் கில்லை வினை. (85)

கற்றவர்க்கே இல்லைக் கரிசறுத்தல் கற்றநெறி

உற்றவர்க்கே இல்லை உறுங்கரிசு - மற்றுடலைச்
சேதித்தார்க் கில்லைத் திரிமலமெய்த் தேவோடு
சாதித்தார்க் கில்லையுயிர் தான். (86)

சீவனுற்றார்க் கில்லை சிவமச் சிவமச் சிவமென்னும்
தேவனுற்றார்க் கில்லையந்தச் சீவனென்கை - ஆவதனால்
அங்காங்கி யாக அடையும் உயர்பிழிவாம்
மங்காதே வைக்கும் வரம். (87)

வாளுற்றார்க் கில்லை வருங்கருணை மன்னுதவக்
கோளுற்றார்க் கில்லை கொடுங்கோபம் - வேளுற்ற
நெஞ்சினார்க் கில்லை நிகழ்மரபு தீதைவிட
அஞ்சினார்க் கில்லை அறம். (88)

மரத்தில் உருவமைக்க மாறும் மரத்தைக்
கருத்தில் அமைக்கவுருக் காணாத் - திருத்துமரன்
காணுங்கால் ஆவியினைக் காணாமெய் யாவியினைக்
காணுங்கால் காணா தரன். (89)

சித்திரமும் நற்சுவருஞ் சேருங்கால் ஒன்றாம்நற்
சித்திரமே காட்டாதிச் சேர்சுவரைப் - புத்திதனைத்
தேற்றும் அரனே செலுமுயிரைக் காட்டாமல்
தோற்றியவா றென்னத் துணி. (90)

இரும்பினைப்பொ ன்னாக்கும் இயைந்த குளிகை
திரும்பியிரும் பாக்குதலைச் செய்யா - விரும்புமலம்
போக்குவதே அல்லாற்பின் போனதனை ஆருயிர்மேல்
ஆக்குதலைச் செய்யான் அரன். (91)

---------xxxxx-----------